## சேரமான் பெருமாள் நாயனார் அருளிய

# 3. திருக்கைலாய ஞான உலா (8)

**நூல்** **திருக்கைலாய ஞான உலா**

உலா என்பது தமிழில் வழங்கும் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று.

திறந்தெரிந்த பேதை முதலெழுவர் செய்வகை
மறந்தயர வந்தான் மறுகென் - றறைந்தகலி
வெண்பா உலாவாம்

என இதற்கு இலக்கணம் கூறுவர் வச்சணந்தி மாலை ஆசிரியர். இப்பிரபந்தம் உலாச்செய்யுள் எனவும், உலாப்புறம் எனவும் வழங்கப்படும்.

1. பேதை *5 - 7;* 2. பெதும்பை *8 - 11;* 3.மங்கை *12 - 13;* 4. மடந்தை *14 - 19;* 5. அரிவை *20 - 25* 6. தெரிவை *26 - 32* 7. பேரிளம் பெண் *33 - 40.*

இவ்வெழுவகைப் பெண்கள் தன்னிரகற்ற தலைவன் ஒருவன் உலாவருகின்றபோது அவனின் அழகிய தோற்றத்தைக் கண்டு, பேதலித்துத் தம் எண்ணங்களைக் கலிவெண்பாவால் பாடப்பெறுவதே உலாவாம். இஃது ஒரு தலைக் காமமாகிய கைக்கிளைத் திணையைச் சாரும்.

வீதி உலாவரும் தன்னேரில்லாத் தலைவனை அவ்வவ் பருவத்திற்குரிய மகளிர் தம் பருவ நிலைக்கு ஏற்ப உடல் வனப்பு, உடைவகை, அணிகள், விளையாட்டுப் போன்ற தொழில் திறங்கள் ஆகியவை உள்ளவாறு விளக்கப்பெறும். அம்மகளிர்களின் உரையாடல்கள் வழி அவர்களின் மனநிலையை உய்த்து உணரலாம். இவ்வெழுவகை மகளிர் தலைவனைப் பற்றிக் கூறும் செய்தியால் அவனின் பேரெழிலான வடிவமைப்பும், தலைமைப் பண்பும், வீரமும், இனிது விளங்கும்.

உலா 'திரு' எனத் தொடங்கப் பெற்று 'உலா' என முடிகின்றது. எனவே இது திருஉலாவாம். மணிவாசகப் பெருமானார் பாடிய திருக்கோவையார் போல இந்நூல் திருவுலா என்பதில் ஐயமில்லை. அதனாலன்றோ இஃது ஆதி உலா எனவும் வழங்குகின்றது. உலாவின் தொடக்கம் இதுவே!

சேரமான் பாடிய திருக்கைலாய ஞான உலாவே தமிழிற்கு முதல் உலா. ஞான உலா; ஆதி உலா; திருவுலா. (இரட்டைப் புலவர்கள் பாடிய ஏகாம்பரநாதர் உலாவில் பொன் வண்ணத்தந்தாதி ஆதியுலா வோட மைத்தானும் எனப்போற்றப் படுதல் காண்க.)

சிவபிரான் திருக்கயிலையில் எழுந்தருளியுள்ளார். தேவர்கள் பெருமானைக் காண வேண்டுமென்ற பெருவேட்கையோடு திருக்கோயிலின் முன்னர் சென்று, நின்று வேண்டுகின்றனர். அவர்கட்கு இரங்கிய பெருமான் ஒருநாளில் தம்மை அழகு பெறச் செய்து கொண்டு வசுக்கள் போற்றிட, முனிவர்கள் வாழ்த்துக் கூற, பன்னிரு கதிரவர்கள் பல்லாண்டிசைக்க, நாரதர் யாழ்மீட்ட பல்வேறு சிறப்புக்களுடன் உலா புறப்பட்டார்.

எழுவகைப் பெண்கள் இறைவனைக் கண்டு காதல் கொள்கின்றனர். அவர்கள் மயங்கிய நிலையில் பாடப் பெற்றதே இவ்வுலா.

சிவபிரானின் முழு முதல் தன்மையை சேரமான் விளக்கும் திறம் அறிந்து மகிழ வேண்டிய ஒன்றாம்.

கயிலையில் அரங்கேற்றப்பட்ட இவ்வுலா ஆண்டுள்ள மாசாத்தனார் வாயிலாகத் திருப்பிடவூர்க்கு வந்து தமிழ்நாட்டில் உலவுவதாயிற்று.

சேரமான் திருக்கயிலைக்குச் செல்லும் வழியில் இவ்வுலாவை மிக விரைவாகப் பாடினர். இதனால் இப்பெருமகனார் மிக விரைவில் பா இயற்றும் பாவாணர் என அறியலாம். அதனாலன்றோ அருணகிரிப் பெருமானும் தம் திருப்புகழில்

ஆதியந்தவுலா ஆசு பாடிய சேரர் எனச் சிறப்பித்தனர்.

திருக்குறள் கருத்துக்கள் பல இவ்வுலாவில் பயின்றுள்ளமையைக் காணலாம்.

சிவபிரான் திருமுன் இவ்வுலா அரங்கேறியது என்பது எத்துணைச் சிறப்பு.

### திருச்சிற்றம்பலம்

1. திருமாலும் நான்முகனும் தேர்ந்துணராது அன்றங்கு
   அருமால் உற அழலாய் நின்ற - பெருமான்

2. பிறவாதே தோன்றினான் காணாதே காண்பான்
   துறவாதே யாக்கை துறந்தான் - முறைமையால்

3. ஆழாதே ஆழ்ந்தான் அகலாது அகலியான்
ஊழால் உயராதே ஓங்கினான் - சூழொளிநூல்

4. ஓதாது உணர்ந்தான் நுணுகாது நுண்ணியான்
யாதுஅணுகாது அணுகியான் - ஆதி

5. அரியாகிக் காப்பான் அயனாய்ப் படைப்பான்
அரனாய் அழிப்பவனுந் தானே - பரனாய

6. தேவர் அறியாத தோற்றத்தான் தேவரைத்தான்
மேவிய வாறே விதித்தமைத்தான் - ஓவாதே

7. எவ்வுருவில் யாரொருவர் உள்குவர் உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள்கொடுப்பான் - எவ்வுருவும்

8. தானேயாய் நின்றளிப்பான் தன்னிற் பிறிதுருவம்
ஏனோர்க்கும் காண்பரிய எம்பெருமான் - ஆனாத

9. சீரார் சிவலோகம் தன்னுள் சிவபுரத்தில்
ஏரார் திருக்கோயில் உள்ளிருப்ப - ஆராய்ந்து

10. செங்கண் அமரர் புறங்கடைக்கண் சென்றுஈண்டி
எங்கட்குக் காட்சியருள் என்றிரப்ப - அங்கொருநாள்

11. பூமங்கை பொய்தீர் தரணி புகழ்மங்கை
நாமங்கை என்றிவர்கள் நன்கமைத்த - சேமங்கொள்

12. ஞானக் கொழுந்து நகராசன் தன் மடந்தை
தேன்மொய்த்த குஞ்சியின்மேல் சித்திரிப்ப - ஊனமில்சீர்

13. நந்தா வனமலரும் மந்தா இனித்தடஞ்சேர்
செந்தா மரைமலர்நூ றாயிரத்தால் - நொந்தா

14. வயந்தன் தொடுத்தமைத்த வாசிகை சூட்டி
நயந்திகழும் நல்லுறுப்புக் கூட்டிப் - பயன்கொள்

15. குலமகளிர் செய்த கொழுஞ்சாந்தம் கொண்டு
நலமலிய ஆகம் தழீஇக் - கலைமலிந்த

16. கற்பகம் ஈன்ற கமழ்பட் டினைஉடுத்துப்
பொற்கழல்கள் கால்மேற் பொலிவித்து - விற்பகரும்

17. சூளா மணிசேர் முடிகவித்துச் சுட்டிசேர்
வாளார் நுதற்பட்டம் மன்னுவித்துத் - தோளா

18. மணிமகர குண்டலங்கள் காதுக்கு அணிந்தாங்கு
அணிவயிரக் கண்டிகை பொன்னாண் - பணிபெரிய

18. ஆரம் அவைபூண்டு அணிதிக ழும்சன்ன
வீரம் திருமார்பில் வில்லிலக - ஏருடைய

20. எண்தோட்கும் கேயூரம் பெய்துதர பந்தனமும்
கண்டோர் மனமகிழக் கட்டுறீஇக் - கொண்டு

21. கடிசூத் திரம்புனைந்து கங்கணங்கைப் பெய்து
வடிவுடைய கோலம் புனைந்தாங்கு - அடிநிலைமேல்

22. நந்திமா காளர் கடைகழிந்த போழ்தத்து
வந்து வசுக்கள் இருக்குரைப்ப - அந்தமில்சீர்

23. எண்ணருங் கீர்த்தி யெழுவர் இருடிகளும்
அண்ணல்மேல் ஆசிகள் தாமுணர்த்த - ஒண்ணிறத்த

24. பன்னிருவர் ஆதித்தர் பல்லாண்டு எடுத்திசைப்ப
மன்னும் மகதியன்யாழ் வாசிப்பப் - பொன்னியலும்

25. அங்கி கமழ்தூபம் ஏந்த யமன்வந்து
மங்கல வாசகத்தால் வாழ்த்துரைப்பச் - செங்கண்

26. நிருதி முதலோர் நிழற்கலன்கள் ஏந்த
வருணன் மணிக்கலசந் தாங்கத் - தெருவெலாம்

27. வாயு நனிவிளக்க மாமழை நீர்தெளிப்பத்
தூயசீர்ச் சோமன் குடையெடுப்ப - மேவியசீர்

28. ஈசானன் வந்துஅடைப்பை கைக்கொள்ள அச்சுனிகள்
வாயார்ந்த மந்திரத்தால் வாழ்த்துரைப்பத் - தூய

29. உருத்திரர்கள் தோத்திரங்கள் சொல்லக் குபேரன்
திருத்தகு மாநிதியஞ் சிந்தக் - கருத்தமைந்த

30. கங்கா நதியமுனை உள்ளுறுத்த தீர்த்தங்கள்
பொங்கு கவரி புடையிரட்டத் - தங்கிய

31. பைந்நாகம் எட்டும் சுடரெடுப்பப் பைந்தறுகண்
கைந்நாகம் எட்டும் கழல்வணங்க - மெய்ந்நாக

32. மேகம் விதானமாய் மின்னெலாம் சூழ்கொடியாய்
மேகத் உருமும் முரசறையப் - போகஞ்சேர்

33. தும்புரு நாரதர்கள் பாடத் தொடர்ந்தெங்கும்
கொம்புருவ நுண்ணிடையார் கூத்தாட - எம்பெருமான்

34. விண்ணோர் பணிய உர்ந்த விளங்கொளிசேர்
வெண்ணார் மழவிடையை மேல்கொண்டாங்கு - எண்ணார்

35. கருத்துடைய பாரிடங்கள் காப்பொத்துச் செய்யத்
திருக்கடைகள் ஏழ்கழிந்த போதில் - செருக்குடைய

36. சேனா பதிமயில்மேல் முன்செல்ல யானைமேல்
ஆனாப்போர் இந்திரன் பின்படர - ஆனாத

37. அன்னத்தே யேறி அயன்வலப்பால் கைபோதக்
கன்னவிலும் திண்டோள் கருடன்மேல் - மன்னிய

38. மால்இடப்பால் செல்ல மலரார் கணைஐந்து
மேலிடப்பால் மென்கருப்பு வில்இடப்பால் - ஏல்வுடைய

39. சங்கணையும் முன்கைத் தடமுலையார் வேல்எய்வான்
கொங்கணையும் பூவாளி கோத்தமைத்த - ஐங்கணையான்

40. காமன் கொடிப்படைமுன் போதக் கதக்காரி
வாமன் புரவிமேல் வந்தணைய - நாமஞ்சேர்

41. வேழ முகத்து விநாயகனை உள்ளுறுத்துச்
சூழ்வளைக்கைத் தொண்டைவாய்க் கொண்டையொண்கண் - தாழ்கூந்தல்

42. மங்கை எழுவருஞ் சூழ மடநீலி
சிங்க அடலேற்றின் மேற்செல்லத் - தங்கிய

43. விச்சா தார்இயக்கர் கின்னரர் கிம்புருடர்
அச்சா ரணர்அரக்க ரோடசுரர் - எச்சார்வும்

44. சல்லரி தாளந் தகுணிகந் தந்தளகம்
கல்லலகு கல்ல வடம்மொந்தை - நல்லிலயத்

45. தட்டழி சங்கம் சலஞ்சலம் தண்ணுமை
கட்டழியாப் பேரிகரதாளம் - கொட்டும்

46. குடமுழவம் கொக்கரை வீணை குழல்யாழ்
இடமாந் தடாரி படகம் - இடவிய

47. மத்தளர் துந்துபி வாய்ந்த முருடிவற்றால்
எத்திசை தோறும் எழுந்தியம்ப - ஒத்துடனே

48. மங்கலம் பாடுவார் வந்திறைஞ்ச மல்லரும்
கிங்கரரும் எங்குங் கிலுகிலுப்பத் - தங்கிய

49. ஆறாம் இருதுவும் யோகும் அருந்தவமும்
மாறாத முத்திரையும் மந்திரமும் - ஈறார்ந்த

50. காலங்கள் மூன்றும் கணமும் குணங்களும்
வால கிலியரும் வந்தீண்டி - மேலை

51. இமையோர் பெருமானே போற்றி யெழில்சேர்
உமையாள் மணவாளா போற்றி - எமையாளும்

52. தீயாடி போற்றி சிவனே அடிபோற்றி
ஈசனே எந்தாய் இறைபோற்றி - தூயசீர்ச்

53. சங்கரனே போற்றி சடாமகுடத் தாய்போற்றி
பொங்கரவா பொன்னங் கழல்போற்றி - அங்கொருநாள்

54. ஆய விழுப்போர் அருச்சுனன் ஆற்றற்குப்
பாசுபதம் ஈந்த பதம்போற்றி - தூய

55. மலைமேலாய் போற்றி மயானத்தாய் வானோர்
தலைமேலாய் போற்றிதாள் போற்றி - நிலைபோற்றி

56. போற்றியெனப் பூமாரி பெய்து புலன்கலங்க
நாற்றினையும் எங்கும் நலம்பெருக - ஏற்றுக்

57. கொடியும் பதாகையும் கொற்றக் குடையும்
வடிவுடைய தொங்கலும் சூழக் - கடிகமழும்

58. பூமாண் கருங்குழலார் உள்ளம் புதிதுண்பான்
வாமான ஈசன் வரும்போழ்திற் - சேமேலே

## குழாங்கள்

59. வாமான யீசன் மறுவில்சீர் வானவர்தம்
கோமான் படைமுழக்கங் கேட்டலுமே - தூமாண்பில்

60. வானநீர் தாங்கி மறையோம்பி வான்பிறையோடு
ஊனமில் சூலம் உடையவாய் - ஈனமிலா

61. வெள்ளை யணிதலால் வேழத்து உரிபோர்த்த
வள்ளலே போலும் வடிவுடைய - ஒள்ளிய

62. மாட நடுவில் மலரார் அமளியே
கூடிய போர்க்கல மாக்குறித்துக் - கேடில்

63. சிலம்பு பறையாகச் சேயரிக்கண் அம்பா
விலங்கு கொடும்புருவம் வில்லா - நலந்திகழும்

64. கூழைபின் தாழ வளைஆர்ப்பக் கைபோந்து
கேழ்கிளரும் அல்குலாந் தேருந்திச் - சூழொளிய

65. கொங்கைமாப் பொங்கக் கொழுநர் மனங்கவர
அங்கம் பொருதசைந்த ஆயிழையார் - செங்கேழற்

66. பொற்கவசத் துள்ளால் மணிநீர் முகஞ்சேர்த்தி
நற்பெருங் கோலம் மிகப்புனைந்து - பொற்புடைய

67. பேதை முதலாகப் பேரிளம்பெண் ஈறாக
மாதரவர் சேர மகிழ்ந்தீண்டிச் - சோதிசேர்

68. சூளிகையுஞ் சூட்டுஞ் சுளிகையுஞ் சுட்டிகையும்
வாளிகையும் பொற்றோடும் மின்விலக - மாளிகையின்

69. மேலேறி நின்று தொழுவார் துயர்கொண்டு
மாலேறி நின்று மயங்குவார் - நூலேறு

70. தாமமே தந்து சடாதாரி நல்கானேல்
யாமமேல் எம்மை அடும்என்பார் - காமவேள்

71. ஆமென்பார் அன்றென்பார் ஐயுறுவார் கையெறிவார்
தாம்முன்னை நாணோடு சங்கிழப்பார் - பூமன்னும்

72. பொன்னரி மலையைப் பூண்பார்அப் பூண்கொண்டு
துன்னரி மாலையாச் சூடுவார் - முன்னம்

73. ஒருகண் எழுதிவிட்டு ஒன்றெழுதாது ஓடித்
தெருவம் புகுவார் திகைப்பார் - அருகிருந்த

74. கண்ணாடி மேற்பஞ்சு பெய்வார் கிளியென்று
பண்ணாடிச் சொற்பந்துக் குற்றுரைப்பார் - அண்ணல்மேல்

75. கண்ணென்னும் மாசாலங் கோலிக் கருங்குழலார்
திண்ண நிறைத்தாழ் திறந்திட்டார் - ஒண்ணிறந்த

## பேதை

76. பேதைப் பருவம் பிழையாதான் வெண்மணலால்
தூதைச் சிறுசோறு அடுதொழிலாள் - தீதில்

77. இடையாலும் ஏக்கழுத்த மாட்டாள் நலஞ்சேர்
உடையாலும் உள்ளுருக்க கில்லாள் - நடையாலும்

78. கெளவைநோய் காளையரைச் செய்யாள் கதிர்முலைகள்
எவ்வநோய் செய்யும் தொழில்பூணாள் - செவ்வனேர்

79. நோக்கிலும் நோய்நோக்கம் நோக்காள் தன் செவ்வாயின்
வாக்கும் பிறர்மனத்தை வஞ்சியாள் - பூக்குழலும்

80. பாடவந் தோன்ற முடியாள் இளவேய்ந்தோள்
ஆடவர் தம்மை அயர்வுசெய்யாள் - நாடொறும்

81. ஒன்றுரைத்து ஒன்றுன்னி ஒன்றுசெய் ஒன்றின்கண்
சென்ற மனத்தினளாம் சேயிழையாள் - நன்றாகத்

82. தாலி கழுத்தணிந்து சந்தனத்தால் மெய்பூசி
நீல அறுவை விரித்துடுத்துக் - கோலஞ்சேர்

83. பந்தரில் பாவைகொண் டாடும் இப்பாவைக்குத்
தந்தையார் என்றொருத்தி தான்வினவ - அந்தமில்சீர்

84. ஈசன் எரியாடி என்ன அவனையோர்
காய்சின மால்விடைமேற் கண்ணுற்றத் - தாய்சொன்ன

85. இக்கணக்கு நோக்காள் இவள்போல்வாள் காமன்நூல்
நற்கணக்கின் மேற்சிறிதே நாட்செய்தாள் - பொற்புடைய

## பெதும்பை

86. பேரொளிசேர் காட்சிப் பெதும்பைப் பிராயத்தாள்
காரொளிசேர் மஞ்ஞைக் கவின்இயலாள் - சீரொளிய

87. தாமரை ஒன்றின் இரண்டு குழையிரண்டு
காமருவி கெண்டையோர் செந்தொண்டை - தூமருவி

88. முத்த முரிவெஞ் சிலைசுட்டி செம்பவளம்
வைத்தது போலும் மதிமுகத்தாள் - ஒத்தமைந்த

89. கங்கணம் சேர்ந்திலங்கு கையாள் கதிர்மணியின்
கிங்கிணி சேர்ந்த திருந்தடியாள் - ஒண்கேழல்

90. அந்துகில் சூழந்தசைந்த அல்குலாள் ஆய்பொதியில்
சந்தனந் தோய்ந்த தடந்தோளாள் - வந்து

91. திடரிட்ட திண்வரைக்கண் செய்த முலையாள்
கடல்பட்ட இன்னமுதம் அன்னாள் - மடல்பட்ட

92. மாலை வளாய குழலாள் மணம்நாறு
சேலை இளங்கிளிபோல் தூமொழியாள் - சாலவும்

93. வஞ்சனை செய்து மனங்கவரும் கண்ணுக்கு
அஞ்சனத்தை இட்டங்கு அழகாக்கி - எஞ்சா

94. மணியாரம் பூண்டொழி மெல்விரலிற் சேர்த்தி
அணியார் வளைதோள்மேல் மின்ன - மணியார்த்த

95. தூவெண் மணற்கொண்டு தோழியரும் தானுமாய்க்
காமன் உருவம் வரஎழுதிக் - காமன்

96. கருப்புச் சிலையும் மலரம்புத் தேரும்
ஒருப்பட்டு உடன்எழுதும் போழ்தில் - விருப்பூரும்

97. தேனமரும் கொன்றையந்தார்த் தீர்த்தன் சிவலோகன்
வானமால் ஏற்றின்மேல் வந்தணையத் - தானமர

98. நன்றறிவார் சொன்ன நலந்தோற்று நாண்தோற்று
நின்றறிவு தோற்று நிறைதோற்று - நன்றாகக்

99. கைவண்டுங் கண்வண்டும் ஓடக் கலைஓட
நெய்விண்ட பூங்குழலாள் நின்றொழிந்தாள் - மொய்கொண்ட

## மங்கை

100. மங்கை யிடங்கடவா மாண்பினாள் வானிழிந்த
கங்கைச் சுழியனைய உந்தியாள் - தங்கிய

101. அங்கை கமலம் அடிகமலம் மான்நோக்கி
கொங்கை கமலம் முகங்கமலம் - பொங்கெழிலார்

102. இட்டிடையும் வஞ்சி இரும்பணைத்தோள் வேயெழிலார்
பட்டுடைய அல்குலுந் தேர்த்தட்டு - மட்டுவிரி

103. கூந்தல் அறல்பவளம் செய்யவாய் அவ்வாயில்
ஏய்ந்த மணிமுறுவல் இன்முத்தம் - வாய்ந்தசீர்

104. வண்டு வளாய வளர்வா சிகைசுட்டிக்
கண்டி கழுத்திற் கவின்சேர்த்திக் - குண்டலங்கள்

105. காதுக்கு அணிந்து கனமே கலைந்திருத்தித்
தீதில் செழுங்கோலம் சித்திரித்து - மாதராள்

106. பொற்கூட்டிற் பூவையை வாங்கி அதனோடும்
சொற்கோட்டி கொண்டிருந்த ஏல்வைக்காண் - நற்கோட்டு

107. வெள்ளி விலங்கல்மேல் வீற்றிருந்த ஞாயிறுபோல்
ஒள்ளிய மால்விடையை மேல்கொண்டு - தெள்ளியநீர்

108. தாழும் சடையான் சடாமகுடம் தோன்றுதலும்
வாழுமே மம்மர் மனத்தளாய்ச் - சூழொளியான்

109. தார்நோக்கம் தன் தாரும் நோக்கும் அவனுடைய
ஏர்நோக்கும் தன்ன எழில்நோக்கும் - பேரருளான்

110. தோள்நோக்கும் தன்தோளும் நோக்கும் அவன்மார்பின்
நீள்நோக்கம் வைத்து நெடிதுயிர்த்து - நாண்நோக்காது

111. உள்ளம் உருக ஒழியாத வேட்கையாம்
வெள்ளத் திடையழுந்தி வெய்துயிர்த்தாள் - ஒள்ளிய

### மடந்தை

112. தீந்தமிழின் தெய்வ வடிவாள் திருந்தியசீர்
வாய்ந்த மடந்தைப் பிராயத்தாள் - ஏய்ந்தசீர்

113. ஈசன் சிலையும் எழில்வான் பவளமும்
சேய்வலங்கை வேலுந் திரள்முத்தும் - பாசிலைய

114. வஞ்சியும் வேயும் வளர்தா மரைமொட்டும்
மஞ்சில்வரு மாமதிபோல் மண்டலமும் - எஞ்சாப்

115. புருவமும் செவ்வாயும் கண்ணும் எயிறும்
உருவ நுசுப்பும்மென் தோளும் - மருவினிய

116. கொங்கையும் வாண்முகமு மாக்கொண்டாள் கோலஞ்சேர்
பங்கயப் போதனைய சேவடியாள் - ஒண்கேழல்

117. வாழைத்தண் டன்ன குறங்கினாள் வாய்ந்தசீர்
ஆழித்தேர்த் தட்டனைய அல்குலாள் - ஊழித்

118. திருமதியம் மற்றொன்றாம் என்று முகத்தை
உருவுடைய நாண்மீன்சூழ்ந் தாற்போல் - பெருகொளிய

119. முத்தாரங் கண்டத்து அணிந்தாள் அணிகலங்கள்
மொய்த்தார வாரம் மிகப்பெருகி - வித்தகத்தால்

120. கள்ளும் கடாமும் கலவையுங் கைபோந்திட்டு
உள்ளும் புறமும் செறிவமைத்துத் - தெள்ளொளிய

121. காளிங்கம் சோதி கிடப்பத் தொடுத்தமைத்த
தாளிம்பத் தாமம் நுதல்சேர்த்தித் - தோளெங்கும்

122. தண்ணறுதம் சந்தனம் கொண்டு அப்பிச் சதிர்சாந்தை
வண்ணம் பெறமிசையே மட்டித்தாங்கு ஒண்ணுதலாள்

123. தன்னமர் தோழியர்கள் சூழத் தவிசேறிப்
பின்னுமோர் காமரம் யாழமைத்து - மன்னும்

124. விடவண்ணக் கண்டத்து வேதியன்மேல் இட்ட
மடல்வண்ணம் பாடும் பொழுதீண்டு - அடல்வல்ல

125. வேல்வல்லான் வில்வல்லான் மெல்லியலார்க்கு எஞ்ஞான்றும்
மால்வல்லான் ஊர்கின்ற மால்விடையின் - கோல

126. மணியேறு கேட்டாங்கு நோக்குவான் சால
அணியேறு தோளானைக் கண்டாங்கு அணியார்ந்த

127. கோட்டி ஒழிய எழுந்து குழைமுகத்தைக்
கோட்டி நுதல்சிவப்ப வாய்துலக்கி - நாட்டார்கள்

128. எல்லாருங் கண்டார் எனக்கடவுள் இங்காயம்
நல்லாய் படுமேல் படுமென்று - மெல்லவே

129. செல்ல லுறுஞ்சரணம் கம்பிக்கும் தன்னுறுநோய்
சொல்லலுறும் கொல்லி உடைசெறிக்கும் - நல்லாகம்

130. காணல் உறுங்கண்கள் நீர்மல்கும் காண்பார்முன்
நாணல் உறும்நெஞ்சம் ஒட்டாது - பூணாகம்

131. புல்லலுறும் அண்ணல்கை வாரானென்று இவ்வகையே
அல்லலுறும் அழுந்தும் ஆழ்துயரால் - மெல்லியலாள்

132. தன்னுருவம் பூங்கொன்றைத் தார்கொள்ளத் தான்கொன்றைப்
பொன்னுருவம் கொண்டு புலம்புற்றாள் - பின்னொருத்தி

## அரிவை

133. செங்கேழல் தாமரைபோல் சீறடியாள் தீதிலா
அங்கேழ் அரிவைப் பிராயத்தாள் - ஒண்கேழல்

134. திங்களுந் தாரகையும் வில்லும் செழும்புயலும்
தங்கொளிசேர் செவ்வாயும் உண்மையால் - பொங்கொளிசேர்

135. மின்னார்வான் காட்டும் முகவொளியாள் மெய்ம்மையே
தன்னாவார் இல்லாத் தகைமையாள் - எந்நாளும்

136. ''இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்'' பென்னும் - சொல்லாலே

137. அல்குற்கு மேகலையைச் சூழ்ந்தாள் அணிமுலைமேல்
மல்கிய சாந்தொடு பூண்புனைந்து - நல்கூர்

138. இடையிடையே உள்ளுருகக் கண்டாள் எழிலார்
நடைபெடை அன்னத்தை வென்றாள் - அடியிணைமேல்

139. பாடகங் கொண்டு பரிசமைத்தாள் பன்மணிசேர்
சூடகம் முன்கை தொடர்வித்தாள் - கேடில்சீர்ப்

140. பொன்னரி மாலை தலைக்கணிந்து பூண்கொண்டு
மன்னுங் கழுத்தை மகிழ்வித்தாள் - பொன்னனாள்

141. இன்னிசை வீணையை வாங்கி இமையவர்தம்
அண்ணல்மேல் தானிட்ட ஆசையால் - முன்னமே

142. பாடல் தொடங்கும் பொழுதிற் பரஞ்சோதி
கேடிலா மால்விடைமேல் தோன்றுதலும் - கூடிய

143. இன்னிசையும் இப்பிறப்பும் பேணும் இருந்தமிழும்
மன்னிய வீணையுங் கைவிட்டுப் - பொன்னனையீர்

144. இன்றன்றே காண்பது எழில் நலம் கொள்ளேனேல்
நன்றன்றே பெண்மை நமக்கென்று - சென்றவன்தன்

145. ஒண்களபம் ஆடும் ஒளிவாள் முகத்திரண்டு
கண்களபம் ஆடுவபோல கட்டுரைத்தும் - ஒண்கேழல்

146. கூந்தல் அவிழ்க்கும் முடிக்குங் கலை திருத்தும்
காந்தம் திமிரும் முலையார்க்கும் - பூந்துகிலைச்

147. சூழும் அவிழ்க்கும் தொழும் அழும் சோர்துயருற்று
ஆழும் அழுந்தும் அயாவுயிர்க்கும் - சூழ்ஒளிய

148. அங்கை வளைதொழுது காத்தாள் கலைகாவாள்
நங்கை மிவளும் நலந்தோற்றாள் - அங்கொருத்தி

## தெரிவை

149\. ஆரா அமுதம் அவயவம் பெற்றனைய
சீரார் தெரிவைப் பிராயத்தாள் - ஓரா

150\. மருளோசை இன்மழலை வாய்ச்சொலால் என்றும்
இருள்தீர் புலரியே ஒப்பாள் - அருளாலே

151\. வெப்பம் இளையவர்கட்கு ஆக்குதலால் உச்சியோடு
ஒப்பமையக் கொள்ளும் உருவத்தாள் - வெப்பந்தீர்ந்து

152\. அந்தளிர்போல் சேவடியும் அங்கையும் செம்மையால்
அந்திவான் காட்டும் அழகினாள் - அந்தமில்

153\. சீரார் முகம்மதியம் ஆதலால் சேயிழையாள்
ஏரார் இரவின் எழில்கொண்டாள் - சீராரும்

154\. கண்ணார் பயோதரமும் நுண்ணிடையும் உண்மையால்
தண்ணிளங் காரின் சவிகொண்டாள் - வண்ணஞ்சேர்

155\. மாந்தளிர் மேனி முருக்கிதழ்வாய் ஆதலால்
வாய்ந்த இளவேனில் வண்மையாள் - மாந்தர்

156\. அறிவுடையீர் நின்மின்கள் அல்லார்போம் என்று
பறையறைவ போலுஞ் சிலம்பு - முறைமையால்

157\. சீரார் திருந்தடிமேல் சேர்த்தினாள் தேர்அல்குல்
ஓராது அகலல் உறாதென்று - சீராலே

158\. அந்துகிலும் மேகலையும் சூழ்ந்தான் அணி முலைகள்
மைந்தர் மனங்கவரும் என்பதனால் - முந்துறவே

159\. பூங்கச்சி னானில்அடையப் பூட்டுறீஇப் பொற்றொடியால்
காம்பொத்த தோளிணையைக் காப்பேவி - வாய்ந்தசீர்

160\. நற்கழுத்தை நல்லாரத் தால்மறைத்துக் காதுக்கு
விற்பகருங் குண்டலங்கள் மேவுவித்து - மைப்பகரும்

161\. காவியங் கண்ணைக் கதந்தணிப்பாள் போலத்தன்
தாவிய அஞ்சனத்தை முன்னூட்டி - யாவரையும்

162\. ஆகுலம் ஆக்கும் அழகினாள் அன்னமும்
கோகிலமும் போலுங் குணத்தினாள் - ஆகிப்

163\. பலகருதிக் கட்டிக் கரியவாய்க் கோடி
அலர்சுமந்து கூழைய ஆகிக் - கலைகரந்து

164\. உள்யாதும் இன்றிப் புறங்கமழ்ந்து கீழ்தாழ்ந்து
கள்ளாவி நாறுங் கருங்குழலாள் - தெள்ளொளிய

165. செங்கழுநீர்ப் பட்டுடுத்துச் செங்குங் குமம்எழுதி
அங்கழுநீர்த் தாமம் நுதல்சேர்த்திப் - பொங்கெழிலார்

166. பொற்கவற்றின் வெள்ளிப் பலகை மணிச்சூது
நற்கமைய நாட்டிப் பொரும்பொழுதில் - விற்பகிரும்

167. தோளான் நிலைபேறு தோற்றங்கே டாய்நின்ற
தாளான் சடாமகுடம் தோன்றுதலும் - விற்பகிரும்

168. நாணார் நடக்க நலத்தார்க்கு இடையில்லை
ஏணார் ஒழிக எழிலொழிக - பேணும்

169. குலத்தார் அகன்றிடுக குற்றத்தார் வம்மின்
நலத்தீர் நினைமினீர் என்று - சொலற்கரிய

170. தேவாதி தேவன் சிவனாயில் தேன்கொன்றைப்
பூவாரலங்கல் அருளாது - போவானேல்

171. கண்டால் அறிவன் எனச்சொல்லிக் கைசோர்ந்து
வண்டார்பூங் கோதை வளந்தோற்றாள் - ஒண்டாய

## பேரிளம்பெண்

172. பெண்ணரசாய்த் தோன்றிய பேரிளம் பெண்மையாள்
பண்ணமரும் இன்சொல் பணிமொழியாள் - மண்ணின்மேல்

173. கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே வுளவென்று - பண்டையோர்

174. கட்டுரையை மேம்படுத்தாள் கண்ணாடி மண்டலம்போல்
விட்டிலங்கு நல்லுகிர்சேர் மெல்விரலாள் - கட்டரவம்

175. அஞ்சப் பரந்தகன்ற அல்குலாள் ஆய்நலத்த
வஞ்சிக் கொடிநுடங்கும் நுண்ணிடையாள் - எஞ்சாத

176. பொற்செப்பு குண்டு முகடு மணியழுத்தி
வைத்தன போல வளர்ந்தேந்தி - ஒத்துச்

177. சுணங்கும் திதலையும் சூழ்போந்து கண்டார்க்கு
அணங்கும் அமுதமுமாய்த் தோன்றி - இணங்கொத்த

178. கொங்கையாள் கோலங்கட்கு எல்லாமோர் கோலமாம்
நங்கையாள் நாகிளவேய்த் தோளினாள் - அங்கையால்

179. காந்தட் குலம்பழித்தாள் காமவேள் காதலாள்
சாந்தம் இலங்கும் அகலத்தாள் - வாய்ந்துடனே

180. ஏய்ந்து குவிந்து திரண்டு மறிந்திருபால்
தேய்ந்து துடித்த செழும்பவளம் - காய்ந்திலங்கி

181. முத்தமுந் தேனும் பொதிந்து முனிவரையும்
சித்தந் திறைகொள்ளும் செவ்வாயாள் - ஒத்து

182. வரிகிடந்து அஞ்சனம் ஆடி மணிகள்
உருவம் நடுவுடைய வாகிப் - பெருகிய

183. தண்ணங் கயலுஞ் சலஞ்சலமுந் தோன்றுதலால்
வண்ணங் கடலனைய வாட்கண்ணாள் - ஒண்ணிறத்த

184. குண்டலஞ்சேர் காதினாள் கோலக் குளிர்மதிய
மண்டலமே போலும் மதிமுகத்தாள் - வண்டலம்ப

185. யோசனை நாறு குழலாள் ஒளி நுதல்மேல்
வாசிகை கொண்டு வடிவமைத்தாள் - மாசில்சீர்ப்

186. பாதாதி கேசம் பழிப்பிலாள் பாங்கமைந்த
சீதாரி கொண்டுதன் மெய்புகைத்தாள் - மாதார்ந்த

187. பண்கவருஞ் சொல்லார்பல் லாண்டேத்தப் பாயொளிசேர்
வெண்கவரி வெள்ளத் திடையிருந்து - ஒண்கேழற்

188. கண்ணவனை அல்லாது காணா செவி அவனது
எண்ணருஞ்சீர் அல்லது இசைகொள்ளா - அண்ணல்

189. கழலடி அல்லது கைதொழா அஃதான்
றழலங்கைக் கொண்டான்மாட் டன்பென் - றெழிலுடைய

190. வெண்பா விரித்துரைக்கும் போழ்தில் விளங்கொளிசேர்
கண்பாவு நெற்றிக் கறைக்கண்டன் - விண்பால்

191. அரியரணம் சொற்றாங்கு அலைபுனலும் பாம்பும்
புரிசடைமேல் வைத்த புராணன் - எரியிரவில்

192. ஆடும் இறைவன் அமரர்குழாம் தற்சூழ
மாட மறுகில் வரக்கண்டு - கேடில்சீர்

193. வண்ணச் சிலம்படி மாதரார் தாமுண்ட
கண்ணெச்சில் எம்மையே ஊட்டுவான் - அண்ணலே

194. வந்தாய் வளைகவர்ந்தாய் மாலும் அருந்துயரும்
தந்தாய் இதுவோ தகவென்று - நொந்தாள்போல்

195. கட்டுரைத்துக் கைசோர்ந்து அகமுருகி மெய்வெளுந்து
மட்டிவரும் பூங்கோதை மால்கொண்டாள் - கொட்டினர்

196. பண்ணாரும் இன்சொற் பணைப்பெருந்தோள் செந்துவர்வாய்ப்
பெண்ஆர வாரம் பெரிதன்றே - விண்ஓங்கி

197. மஞ்சடையும் நீள்குடுமி வாள்நிலா வீற்றிருந்த
செஞ்சடையான் போந்த தெரு. 300

## காப்பு

பெண்ணீமை காமின் பெருந்தோள் இணைகாமின்
உண்ணீமை மேகலையும் உள்படுமின் - தெண்ணீரக்
காரேறு கொன்றையத் தார்க் காவாலி கட்டங்கன்
ஊரேறு போந்த துலா. 301

திருச்சிற்றம்பலம்

1 - 5

## உரை

## இறைவனின் பேராற்றல்

திருமாலும் நான்முகனும் தேர்ந்துணராது அன்றங்கு
அருமால் உறஅழலாய் நின்ற - பெருமான்
பிறவாதே தோன்றினான் காணாதே காண்பான்
துறவாதே யாக்கை துறந்தான் - முறைமையில்
அழாதே ஆழ்ந்தான் அகலாது அகவியான்
ஊழால் உயராதே ஓங்கினான் - சூழொளிநூல்
ஓதாது உணர்ந்தான் நுணுகாது நுண்ணியான்
யாதும் அணுகாது அணுகியான் - ஆதி
அரியாகிக் காப்பான் அயனாப் படைப்பான்
அரனாய் அழிப்பவனும் தானே.

**பொ.ரை**

திருமாலும் நான்முகனும் தேர்ந்துணராத நிலையில் அரிய மயக்கங்கொண்டு உழன்று நின்றபோது தெய்வத் தீப்பிழம்பாய் வெளிப்பட்ட சிவபிரான் கருவாய்ப்பட்டுப் பிறக்காது தூய்மை வடிவோடு தோன்றினான். எவற்றையும் காண்பது இன்றியே, தம் பேரறிவால் கண்டும், அகன்றிருந்தில் இன்றியே அகன்றும் இருப்பவன்; துறவாதே யாக்கையைத் துறந்தவன். விதியால் உயராது தன்னிலையால் இயல்பாகவே ஓங்கி வளர்ந்து நிற்பவன்; அறிவு விளக்கும் நூல்களை ஓதாமலேயே ஓதி உணர்ந்தவன்; எப்பொருளையும் நுண்ணியனாக இராமல் அணுவாகவும் இருப்பவன். காக்கும் ஆதித்திருமாலாகி உலகத்தைக் காப்பவனும், நான்முகனாகி உலகைப் படைப்பவனாகவும், உருத்திரன் இடத்தில் தங்கி ஒடுக்கம் செய்து கொள்பவனும் அவனே யாவன்.

அருமால் - அரிய மயக்கம். யாக்கை - உடம்பு.

சூழொளி நூல் - அறிவு நூல்.

6 - 10

தேவர் அறியாத தோற்றத்தான் தேவரைத்தான் - பரனாய
மேவிய வாறே விதித்தமைத்தான் - ஓவாதே

எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள் கொடுப்பான் - எவ்வுருவம்

தானேயாய் நின்றளிப்பான் தன்னிற் பிறிதுருவம்
ஏனோர்க்கும் காண்பரிய எம்பெருமான் - ஆனாத

சீரார் சிவலோகம் தன்னுள் சிவபுரத்தில்
ஏரார் திருக்கோயில் உள்ளிருப்ப - ஆராய்ந்து

செங்கண் அமரர் புறங்கடைக்கண் சென்று ஈண்டி
எங்கட்குக் காட்சியருள் என்றிரப்ப - அங்கொரு நாள்

**பொ.ரை**

*மேலான விண்ணோரும் காண அரிய முடியா மிகுமேனியன். அவ்விண்ணோர்களைத் தான் சபதமேற்றபடி படைத்து உரிய சூழலை ஏற்படுத்தினான். எவ்வெவர் அவ்வங் வடிவில் இடைவிடாமல் தன்னை எண்ணினும் உள்ளத்துள் அவ்வவ் வடிவங்களாகவே வெளிப்பட்டு அருள்பாலிப்பவன். அன்பராயினார் எண்ணும் அனைத்து வடிவங்களாகவும் ஆகித்தானே நின்று அகத்திலும் புறத்திலும் காட்சி நல்குபவன், தன்னினும் வேறொரு வடிவத்தை எவரும் காண இயலாத நிலையைக் கொண்டவன். இறைவன் நீங்கப் பெறா சிறப்புப் பொருந்திய சிவஉலகம் தன்னுள் சிவபுரத்தில் அழகு நிறைந்த திருக்கோயிலுள் இறைவன் இனிதே வீற்றிருக்க, காட்சி காலத்தைச் சிந்தித்து உணர்ந்து செம்மை மிகு கண்கள் கொண்ட தேவர்கள் தலைவாயிலில் நெருங்கி நின்று அடியார்கட்குச் சேவையை அருள அன்புடன் நவில.*

11 - 15

பூமங்கை பொய்தீர்தரணி புகழ்மங்கை
நாமங்கை என்றிவர்கள் நன்கமைந்த - சேமங்கொள்

ஞானக் கொழுந்து நகராசன் தன் மடந்தை
தேன்மொய்த்த குஞ்சியன் மேல் சித்தரிப்ப - ஊனமில்சீர்

நந்தா வனமலரும் மந்தா கினித் தடஞ்சேர்
செந்தா மரைமலர்நூ றாயிரத்தால் - நொந்தா

வயந்தன் தொடுத்தமைத்த வாசிகை சூட்டி
நயந்திகழும் நல்லுறுப்புக் கூட்டிப் - பயன்கொள்

குலமகளிர் செய்த கொழுந்சாந்தம் கொண்டு
நலமலிய ஆகம் தழீஇக் கலைமலிந்த

**பொ.ரை**

*அம்முறையில் வணங்கிடும் ஒருநாளில் இனிய தாமரை மலரில் உறையும் செல்வ மகள் பொய்மையற்ற நிலமகள் புகழ அமைந்த உருத்திராணி, கலைமகள் என்ற இத்தெய்வ மகளிர் நலமுறச் செய்திட்டு விளங்கிடும் அரிய வழிபாட்டை ஏற்று ஒளி வீசும் அறிவுக் கொழுந்தான மலையரசன் திருமகளாகிய உமையம்மை வண்டுகள் மொய்த்திடும் சடைமேல் அணி செய்யும் நிலையில் பழுதற்று சிறப்போடு விளங்கும் நந்தவனத்து மலர்களாலும் தேவகங்கையில் மலர்ந்த பல இதழ்களையுடைய பல்லாயிர மலர்களாலும் அதிகச் சிரமம் கொண்டு வசந்தன் தொடுத்த வைத்திருந்த மாலையை அணிந்து பிறவி பெற்ற பயனைப் பெற்ற சிறப்புடைய மகளிர் மேன்மை ஓங்கிட சிறந்த கூட்டுப் பொருள்களைச் சேர்த்து அமைத்த கொழுமையான சாந்தினை எடுத்து அழகுமிக்கத் திருமேனியில் பூசி.*

*பூமங்கை - திருமகள். சேமம் - காவல். மந்தாகினி - கங்கை. வயந்தன் - காமன். வாசிகை - மாலை.*

16 - 23

கற்பகம் ஈன்ற கமழ்பட் டினை உடுத்துப் - கலைமலிந்த
பொற்கழல்கள் கால்மேற் பொலிவித்து - விற்பகரும்

சூளா மணிசேர் முடிகவித்துச் சுட்டிசேர்
வாளாக நுதற்பட்டம் மன்னுவித்துத் - தோளா

மணிமகர குண்டலங்கள் காதுக்கு அணிந்தாங்கு
அணிவயிரக் கண்டிகை பொன்னாண் - பணிபெரிய

ஆரம் அவைபூண்டு அணிதிக ழும்சன்ன
வீரம் திருமார்பில் வில்லிலக - ஏருடைய

எண்தோட்டும் கேயூரம் பெய்துதர பந்தனமும்
கண்டோர் மனமகிழக் கட்டுறீஇக் - கொண்டு தோள்களுக்கு

கடி சூத்திரம் புனைந்து கங்கணங்கைப் பெய்து
வடிவுடைய கோலம் புனைதாங்கு அடிநிலைமேல்

நந்திமா காளர் கடை கழிந்த போழ்தத்து
வந்துபசுக்கள் இருக்குரைப்ப - அந்த மில்சீர்

எண்ணருங் கீர்த்தி எழுவர் இருடிகளும்
அண்ணல்மேல் ஆசிகள் தாமுணர்த்த - ஒண்ணிறத்த

**பொ.ரை**

*கற்பகம் உதவிய மணம் வீசும் பட்டாடையை உடுத்தி பொன்னால் செய்யப் பெற்ற வீரக் கழல்களைத் திருவடிகளில் சிறப்புற அணிந்து ஒளி வீசும் சூளாமணி பதித்த மகுடத்தைச் சூட்டி, சுட்டியுடன் சேர்ந்த ஒளி நிறைந்த நெற்றியில் பட்டங்கட்டித் துளை செய்யாத இரத்தினக் கற்கள் பதித்திட்ட மகர மீனின் வடிவில் செய்யப் பெற்ற குண்டலங்களைத் திருச்செவிக்கு அணிபெற அணிந்ததோடு அழகிய வயிரக் கண்டிகையும் பொன்நாணும் சிறப்பான முறையில் நல்ல வேலைப்பாடுகள் கொண்டிட்ட வீரசங்கிலியை மார்பில் ஒளிபெற அணிந்து எழுச்சி கொண்ட எட்டுத் திருத்தோள்களுக்கும் வளையெனும் அணியைக் கண்டோர் உள்ளம் ஈர்க்கும் முறையில் களிப்போடு அரைப்பட்டிகையையும் கட்டி, அதன்மேல் அரைஞாணினை அழகுறப் பூட்டி, கரத்தில் கங்கணங் கொண்டு இயற்கையாய் அடைந்த திருமேனிக்கு உரிமையான செயற்கையான அணிகலன்களைச் செய்தும் திருப்பாதுகை மேலேறி திருநந்தி தேவரும் மாகாளரும் காவல் செய்திடும் திரு அணுக்கன் திருவாயிலைக் கடந்திடும் நிலையில் எட்டு வசுக்களும் ஈசன் முன்தோன்றி இருக்கு மறை ஓத முடிவற்ற சிறப்பினைக் கொண்ட நினைத்தற்கும் அரிய பெரிய புகழ் கொண்ட சப்த முனிவர்களும் வந்து பெருமையிற் சிறந்த தலைவரான சிவனாரை வாழ்த்திட.*

## 24 - 30

பன்னிருவர் ஆதித்தர் பல்லாண்டு எடுத்திசைப்ப - ஒண்ணிறத்த
மன்னும் மகதியன்யாழ் வாசிப்பப் பொன்னியலும்

அங்கி கமழ்தூபம் ஏந்த யமன் வந்து
மங்கல வாசகத்தால் வாழ்த்துரைப்பச் - செங்கண்

நிருதி முதலோர் நிழற்கலன்கள் ஏந்த
வருணன் மணிக்கலசம் தாங்கத் - தெருவெலாம்

வாயு நனிவிளக்க மாமழை நீர்தெளிப்பத்
தூயசீர்ச் சோமன்குடையெடுப்ப - மேவியசீர்

ஈசானன்வந்து அடைப்பை கைக்கொள்ள அச்சுனிகள்
வாயார்ந்த மந்திரத்தால் வாழ்த்துரைப்பத் - தூய

உருத்திரர்கள் தோத்திரங்கள் சொல்லக்குபேரன்
திருத்தகு மாநிதியம் சிந்தக் - கருத்தமைத்த

கங்கா நதியமுனை உள்ளுறுத்த தீர்த்தங்கள்
பொங்கு கவரி புரையிரட்டத் - தங்கிய

**பொ.ரை**

பெருமையிற் மிக்கோனான சிவபிரானை வாழ்த்தி ஒளி வீசும் நிறங்கொண்டவர்களான பன்னிரு சூரியர்களும் பல்லாண்டிசைக்க, நிலைபெற்ற அகத்திய முனிவர் யாழிசைக்க; பொன்னின் வண்ணமாய் விளங்கும் தீக்கடவுள் மணம் பரப்பும் தூப கலசத்தை ஏந்திவர, கூற்றுவன் மங்கலமொழியால் வாழ்த்துக் கூறிட, செவ்விய கண்கள் கொண்ட நிருதி முதலானோர் ஒளிவீசும் கணணாடிகளை ஏந்திவர, நீர்க்கடவுளான வருணன் அழகிய நீர்க்கலசத்தைச் சுமந்துவர, வீதிகள் அனைத்திலும் காற்றுக் கடவுளான வாயு தூய்மையை மேற்கொள்ள, சிறந்த மேகங்கள் வீதிகளில் நீரினைத் தெளிக்க, தூய்மையும் சிறப்பும் கொண்ட திங்கள் குடைபிடிக்க, விரும்பத்தக்க புகழ்கொண்ட ஈசனை வெற்றிலைப் பையைக் கையில் கொண்டு சுமந்து வர, அசுவனி தேவர்கள் மந்திரங்களை வாய் மணக்க ஓதி வர, தூய்மையாளரான உருத்திர கணத்தவர் வாழ்த்து மொழிகளை மொழிந்திட, குபேரனானவன் மேன்மையும் தகுதியும் நிறைந்த பொருள்களை வரும் வழிகளிலெல்லாம் வாரி இறைத்திட, அமைதி பெற்ற மனத்தினரான கங்கை, யமுனை உள்ளிட்ட ஆறுகளின் ஆதி தெய்வங்கள் அளவற்ற வெண்சாமரங்களை இருபக்களிலும் வீச.

. அங்கி - தீக்கடவுள். அச்சுனிகள் - அச்சுனி தேவர்கள்.

**31 - 35**

பைந்நாகம் எட்டும் சுடரெடுப்பப் பைந்தறுகண் - தங்கிய
கைந்நாகம் எட்டும் கழல் வணங்க - மெய்ந்நாக

மேகம் விதானமாய் மின்னெலாம் சூழ்கொடியாய்
மேகத்து உருமும் முரசறையப் - போகஞ்சேர்

தும்புரு நாரதர்கள் பாடத் தொடர்ந்தெங்கும்
கொம்புருவ நுண்ணிடையார் கூத்தாட - எம்பெருமான்

விண்ணோர் பணிய உயர்ந்த விளங்கொளிசேர்
வெண்ணார் மழவிடையை மேல்கொண்டாங்கு - எண்ணார்

கருத்துடைய பாரிடங்கள் காப்பொத்துச் செய்யத்
திருக்கடைகள் ஏழ்கழிந்த போதில்

**பொ.ரை**

இந்நிலவுலகத்தினைத் தாங்கும் கீழ் தலைமையாகத் தங்கியிருக்கும் படங்கள் கொண்ட எட்டுவகையான அரவுகளும் விளக்குகளை ஏந்திவர, பசுமையும் அஞ்சாமையும் கொண்ட துதிக்கையையுடைய எண்திசை யானைகளும் திருவடிகளை வணங்கிட, மெய்ம்மை

# பதினொராந் திருமுறை

## மூலமும் - உரையும்


உரையாசிரியர்

**புலவர் பி.ரா. நடராசன்**



**உமா பதிப்பகம்**

171, (புதிய எண். 18), பவளக் காரத் தெரு,

மண்ணடி, சென்னை - 600 001.

தொலைபேசி : 2521 5363, 2525 0092

# நூல் விவரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பதினொராந் திருமுறை |
| உரையாசிரியர் | : | புலவர் பி.ரா. நடராசன் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | முதல் பதிப்பு - ஆகஸ்ட் 2005 |
| பதிப்புரிமை | : | © உமா பதிப்பகம் |
| தாள் | : | J.K. மேப்லித்தோ 16 கி.கி. |
| நூல் அளவு | : | 14 x 22 செ.மீ. டெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளிகள் |
| பக்கங்கள் | : | viii + 936 = 944 |
| பைண்டிங் | : | கலிக்கோ கட்டு |
| விலை | : | ரூ. 250.00 |
| ஒளி அச்சு | : | விக்னேஷ்வர் கிராபிக்ஸ் சென்னை - 600 005. |
| அச்சிட்டோர் | : | பரமேஸ்வரி கிராபிக்ஸ் சென்னை - 600 005. |
| நூல் வெளியீடு | : | உமா பதிப்பகம் சென்னை - 600 001. |